## சென்னையில் முதல்வர் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து துவக்கி வைத்தார்!

# திருக்கோயில்கள் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 379 இணைகளுக்கு திருமணம்!

### சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன!



**சென்னை, அக். 23-**

**இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், திருக்கோயில்கள் சார்பில் 21.10.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் பொருளாதாரத்தில் பின்தங்கிய 379 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைக்கப்பட்டது. சென்னை, திருவான்மியூரில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.**

இந்து சமய அறநிலையத்துறையானது தன் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்கள் சார்பில் கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்களை நிறுவி அறப்பணிகளை மேற்கொண்டு வருவதோடு, சித்தர்களுக்கும், அருளாளர்களுக்கும் விழா எடுத்தும் சிறப்பு செய்து வருகிறது. மேலும், ஆண்டுதோறும் பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கும், மாற்றுத்திறனாளி இணைகளுக்கும் சீர்வரிசைப் பொருட்களுடன் கட்டணமில்லாமல் திருமணத்தை நடத்தி வருகிறது.

2024-2025 ஆம் நிதியாண்டிற் கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற மானியக்கோரிக்கையில் “பொருளாதாரத்தில் பின்தங்கிய 700 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000/- மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும்“ என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் முதற்கட்டமாக சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 21.10.2024 அன்று திருவான்மியூரில் 31 இணைகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுகள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

தஞ்சாவூர் மண்டலத்தை சேர்ந்த புதுக்கோட்டை மாவட்டம், திருவப்பூர், முத்து மாரியம்மன் திருக்கோயிலில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தலைமையில் 4 இணைகளுக்கும், கொன்னையூர் முத்து மாரியம்மன் திருக்கோயிலில் 3 இணைகளுக்கும், தஞ்சாவூர், கோடியம்மன் திருக்கோயிலில் 16 இணைகளுக்கும், ஆகமொத்தம் 23 இணைகளுக்கும் திருக்கோயில்கள் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

சேலம் மண்டலத்தைச் சேர்ந்த சேலம் மாவட்டம், நங்கவள்ளி, இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் 10 இணைகளுக்கும், பேளூர், தான்தோன்றீஸ்வரர் திருக்கோயிலில் 8 இணைகளுக்கும், தருமபுரி மாவட்டம், குமாரசாமிப் பேட்டை, சிவசுப்ர மணியசுவாமி திருக்கோயிலில் 5 இணைகளுக்கும், தீர்த்தமலை, தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயிலில் 9 இணைகளுக்கும் என மொத்தம் 32 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

திருப்பூர் மண்டலத்தை சேர்ந்த திருப்பூர் மாவட்டம், அவிநாசி, அவிநாசிலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தலைமையில் 13 இணைகளுக்கும், கரூர் மாவட்டம், தான்தோன்றிமலை, கல்யாண வெங்கட்ரமண சுவாமி திருக்கோயிலில் 5 இணைகளுக்கும் என மொத்தம் 18 இணைகளுக்கும் திருமணம் நடைபெற்றது.



நாகப்பட்டினம் மண்டலத்தை சேர்ந்த திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, இராஜகோபாலசுவாமி திருக்கோயிலில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் 14 இணைகளுக்கும், கோயில் கந்தன்குடி, சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் 5 இணைகளுக்கும், நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல் நவனீதேஸ்வரர் திருக்கோயிலில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகத் தலைவர் உ.மதிவாணன் ஆகியோர் தலைமையில் 19 இணைகளுக்கும் என மொத்தம் 38 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

காஞ்சிபுரம் மண்டலத்தை சேர்ந்த செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 2 இணைகளுக்கும், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 10 இணைகளுக்கும் என மொத்தம் 12 இணைகளுக்கும், வேலூர் மண்டலத்தை சேர்ந்த காட்பாடி வட்டம். வள்ளிமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ஒரு இணைக்கும், அணைக்கட்டு, வெட்டுவானம், எல்லையம்மன் திருக்கோயிலில் ஒரு இணைக்கும், குடியாத்தம், மீனூர்மலை, வெங்கடேசப்பெருமாள் திருக்கோயிலில் ஒரு இணைக்கும், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ஒரு இணைக்கும், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 3 இணைகளுக்கும், பொன்னேரி, ஆண்டார்குப்பம் பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 2 இணைகளுக்கும், என மொத்தம் 9 இணைகளுக்கும்,

கடலூர் மண்டலத்தில், கடலூர், திருவந்திபுரம், தேவநாத சுவாமி திருக்கோயிலில் 6 இணைகளுக்கும், விருத்தாச்சலம், விருத்தகிரீஸ்வரர் திருக்கோயிலில் 4 இணைகளுக்கும், மணவாளநல்லூர், கொளஞ்சியப்பர் திருக்கோயிலில் 5 இணைகளுக்கும், அரியலூர் மாவட்டம், அரியலூர் ஆலந்துறையார் கோதண்டராமசாமி திருக்கோயிலில் 2 இணைகளுக்கும் என மொத்தம் 17 இணைகளுக்கும், மயிலாடுதுறை மண்டலத்தை சேர்ந்த கும்பகோணம், உப்பிலியப்பன் திருக்கோயிலில் 6 இணைகளுக்கும், திருமணஞ்சேரி, உத்வாகநாத சுவாமி திருக்கோயிலில் 8 இணைகளுக்கும், திருவெண்காடு, சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் 2 இணைகளுக்கும், திருநாகேஸ்வரம், நாகநாத சுவாமி திருக்கோயிலில் ஒரு இணைக்கும் என மொத்தம் 17 இணைகளுக்கும் திருமணம் நடத்தி வைக்கப்பட்டு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கோயம்புத்தூர் மண்டலத்தை சேர்ந்த கோவை மாவட்டம் உக்கடம், இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் 20 இணைகளுக்கும், பொள்ளாச்சி, சுப்ர மணியசுவாமி திருக்கோயிலில் 10 இணைகளுக்கும், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாரியம்மன் திருக்கோயிலில் 5 இணைகளுக்கும் ஆக மொத்தம் 35 இணைகளுக்கும், திருவண்ணாமலை மண்டலத்தை சேர்ந்த கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டிநாயனப்பள்ளி, ஆஞ்சநேய சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 9 இணைகளுக்கும், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை, அருணாசலேசுவரர் திருக்கோயிலில் 3 இணைகளுக்கும், ஆரணி, புத்திரகாமேட்டீஸ்வரர் திருக்கோயிலில் 3 இணைகளுக்கும் ஆக மொத்தம் 15 இணைகளுக்கும், ஈரோடு மண்டலத்தை சேர்ந்த நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் 9 இணைகளுக்கும், ஈரோடு மாவட்டம், திண்டல், வேலாயுதசுவாமி திருக்கோயில் சார்பில் 27 இணைகளுக்கும் ஆக மொத்தம் 36 இணைகளுக்கும்,



விழுப்புரம் மண்டலத்தை சேர்ந்த விழுப்புரம், இரும்பை, மகா காளீஸ்வரர் திருக்கோயிலில் 3 இணைகளுக்கும், கோலியனூர், வாலீஸ்வரர் திருக்கோயிலில் ஒரு இணைக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் திருநாவலூர், பக்தஜனேஸ்வரர் திருக்கோயிலில் 2 இணைகளுக்கும், ஆதிதிருவரங்கம், அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் ஒரு இணைக்கும், ஆலத்தூர். வாலீஸ்வரர் திருக்கோயி லில் ஒரு இணைக்கும், உ.கீரனூர், ஆதிகேசவ பெருமாள் திருக்கோயிலில் ஒரு இணைக்கும், கைலாசநாதர் திருக்கோயிலில் ஒரு இணைக்கும், என மொத்தம் 9 இணைகளுக்கும்,

மதுரை மண்டலத்தை சேர்ந்த மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 3 இணைகளுக்கும், அவனியாபுரம், கல்யாண சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ஒரு இணைக்கும் என மொத்தம் 4 இணைகளுக்கும், திண்டுக்கல் மண்டலத்தை சேர்ந்த திண்டுக்கல், காளகஸ்தீசுவரர் திருக்கோயிலில் 14 இணைகளுக்கும், தேனி மாவட்டம், வீரபாண்டி, கண்ணீஸ்வரமுடையார் திருக்கோயிலில் 5 இணைகளுக்கும் என மொத்தம் 19 இணைகளுக்கும், திருச்சி மண்டலத்தில் சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் 29 இணைகளுக்கும், சிவகங்கை மண்டலத்தை சேர்ந்த சிவகங்கை மாவட்டம், கொல்லங்குடி, வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயிலில் 21 இணைகளுக்கும், இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயிலில் ஒரு இணைக்கும், என மொத்தம் 22 இணைகளுக்கும்,

தூத்துக்குடி மண்டலத்தை சேர்ந்த தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம், விஸ்வநாத சுவாமி திருக்கோயிலில் ஒரு இணைக்கும், பசுவந்தகை கைலாசநாத சுவாமி திருக்கோயிலில் 2 இணைகளுக்கும், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ஒரு இணைக்கும் என மொத்தம் 4 இணைகளுக்கும், திருநெல்வேலி மண்டலத்தை சேர்ந்த திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம், பாபநாச சுவாமி திருக்கோயிலில் ஒரு இணைக்கும், அம்பாசமுத்திரம், வீரமார்த்தாண்டேஸ்வரர் திருக்கோயிலில் 2 இணைகளுக்கும், வெள்ளாங்குளி, வீரவினோதீஸ்வரர் திருக்கோயிலில் ஒரு இணைக்கும், முப்பந்தல், இசக்கியம்மன் திருக்கோயிலில் 2 இணைகளுக்கும், பனகுடி, ராமலிங்க சுவாமி திருக்கோயிலில் 2 இணைகளுக்கும், பாளையங்கோட்டை, சாந்தி விநாயகர் திருக்கோயிலில் ஒரு இணைக்கும், என மொத்தம் 9 இணைகளுக்கும் திருமணம் நடத்தி வைக்கப்பட்டு தலா ரூ.60,000 மதிப்பிலான சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்பட்ட திருமண விழாக்களில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாநகராட்சி மேயர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி 142 ”அ வட்ட கழக செயலாளர் எஸ்.பி. கோதண்டம் புதல்வர் கோ.மௌலீஸ்வரன் – என்.பிரியங்கா ஆகியோரின் மணவிழா சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், பகுதி கழக செயலாளர்கள், மண்டலகுழு தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் முன்னிலையிலும், வட்டகழக செயலாளர்கள் எம்.நாகா, ந.தமிழரசு, சை.மு.சேகர், அட்கோகமலநாதன் வரவேற்பில், சைதாப்பேட்டை எஸ்.பி.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அரியலூர் மாவட்ட கழக செயலாளரும், போக்குவரத்துத்துறை அமைச்சருமான சா.சி.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, எஸ்.அரவிந்த்ரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, ஜெ.கருணாநிதி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (22.10.2024) இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னை, அகரம், ஜெகந்நாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் சி.எம்.டி.ஏ. சார்பில் அமைக்கப்பட்டுள்ள பகிர்ந்த பணியிடத்தில் (Coworking Space) நடைபெற்றுவரும் இறுதிக்கட்ட பணிகள் குறித்தும், பெரியார் நகர் மற்றும் ஜவகர் நகர் ஆகிய நூலகங்களை சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்துவது குறித்தும் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், சி.எம்.டி.ஏ. செயற்பொறியாளர் ராஜன் பாபு, மாவட்ட நூலக அலுவலர் திருமதி.கவிதா மற்றும் கட்டிட வல்லுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.